பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 22 திங்கட்கிழமை | 09.10.2023 | கதிர் 332

நீதிமன்ற தடை, பொலிஸ் கொடுபிடிகளையும் மீறி

# மயில்தமடு நில மீட்புக்காக மட்டு நகரில் பெரும் போராட்டம்

## ஜனாதிபதி வருகை தந்துள்ள தருணத்தில் தீவரம்

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும்சட்டவிரோதகுடியேற்றவாசிகளின் ஆக்கிரமிப்பினைதடுத்துநிறுத்துமாறு கோரி 24 நாட்களாக போராடிவரும் அப்பகுதியை சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்கள் பல்வேறு தடைகளையும் தாண்டி நேற்று பெரும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

செங்கலடி மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருகை தந்திருந்த நிலையில், செங்கலடி-கொம்மாதுறை பகுதியில் ஒன்றுகூடிய மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்களும் ஆதரவாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்புமாவட்டவலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில்அமைப்புகள்,பொதுஅமைப்புகள் இணைந்து போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

கொம்மாதுறை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகில் போராட்டம் அமைதியான முறையில் நடந்த ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

மயிலத்தமடு பண்ணையாளர்களின் பூர்வீக மேய்ச்சல் நிலங்களை ஆக்கிரமித்து சிங்களவர்களைக் குடியேற்றுவது தொடர்பான போராட்டம் இன்றுடன் 25 நாள்களாகத் தொடரும் நிலையில் நேற்று அவர்களின் பிரதிநிதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசினார்.

தமிழ் உணர்வாளர்கள் குழுவின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு நடந்தது. மோகன்தான் ஜனாதிபதி மட்டக்களப்பிற்கு வருவதையொட்டி நகரில் மிகப் பெரும் கட்டவுட் வைத்தவர்.

தனது படங்களையோ கட்டவுட்டுக்களையோ இப்படிப் பொது இடங்களில் பயன்படுத்த வேண்டாம் என்றுபின்னர் ரணில் உத்தரவிட்டார் என்பது வேறு விடயம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பண்ணையாளர்களுக்கும் இடையிலான ☞ 2

## இஸ்ரேலிலுள்ள இலங்கையரின் பாதுகாப்பில் அரசு அக்கறை

இஸ்ரேலிலுள்ள இலங்கை ஊழியர்களின்பாதுகாப்புத்தொடர்பிலான விடயங்களை கண்டறிவதற்கான நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேல்--பலஸ்தீனம் இடையே பதற்றமான நிலைமைகள் தோன்றியுள்ள நிலையில் அவர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தொழிலாளர்களை பாதுகாப்பதற்காக இஸ்ரேலின் தற்போதைய நிலைமை ☞ 2

## இந்து சமுத்திர நாடுகளின் அமைச்சர் மட்ட மாநாடு

### ஒக்டோபர் 11 கொழும்பில்

இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்க வுள்ள நிலையில், அதன் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் அடுத்தவாரம்கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஒக்டோபர் 11 கொழும்பில்நடக்கவுள்ள இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக இந்து சமுத்திர எல்லை நாடுகளின் அயலுறவுத்துறை அமைச்சர்கள் மற்றும் உறுப்பு நாடுகளின்மூத்தஅமைச்சர்கள்மற்றும்பிரதிநிதிகள் அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளனர்.

ஆஸ்திரேலியஉதவி அயலுறவு அமைச் சர் டிம் வொட்ஸ், பங்களாதேஷ் அயலுறவு அமைச்சர்கலாநிதிஏ.கே. அப்துல்மொமன், இந்திய அயலுறவு அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் ☞ 8

## மார்பகப் புற்றுநோய்க்கு 30 சிகிச்சை நிலையங்கள்

### அரச வைத்தியசாலைகளில் தொடங்கப்படுகின்றன

மார்பகப்புற்றுநோய் வருவதை தடுக்க முடியாவிட்டாலும் அதனை தொடக்கத்திலேயேகண்டறிவதால் முழுமையாகசுகப்படுத்த முடியுமென தேசிய புற்றுநோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் வைத்திய நிபுணர் ஹசரலிபெர்னாண்டோ தெரிவித்தார்.

மார்பகப் புற்றுநோயாளர்களைக் கண்டறிவதற்காக சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் வகையில் சுகவனிதையர் மற்றும் புற்றுநோயினை தொடக்கத்திலேயே அறிந்துகொள்வதற்காக நிறுவப்பட்டிருக்கும் நிலையகளுக்கு மேலதிகமாக நாடளாவியரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகளில் உள்ள சத்திரசிகிச்சை நிபுணர்களின் கீழ் 30 புற்றுநோய் சிகிச்சை ☞ 2

## அனைவருடனும் ஒரே மேசையில் பேசி மயிலத்தமடு சிக்கலுக்கு விரைவில் தீர்வு

### வாக்குறுதியளித்தார் ஜனாதிபதி

மயிலத்தமடு மாதவணை மேய்ச்சல்தரை தொடர்பில் பண்ணையாளர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளில் கரிசனைகொள்வார் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினரையும் ஒரே மேசையில் அழைத்து கலந்துரையாடி தீர்வு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்உணர்வாளர்கள் குழுவின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகனின் ஏற்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பண்ணையாளர்களுக்கும்இடையிலானசந்திப்பு நேற்றுசெங்கலடி ☞ 8

மயிலத்தமடுவில் இருந்து

## துரத்தப்பட்ட 990 பண்ணையாளர்களும் அவர்களின் இடங்களுக்கு மீளவேண்டும்


### முன்னணி பேச்சாளர் சுகாஸ் வலியுறுத்து

மயிலத்தமடுவில் இருந்து துரத்தப்பட்ட 990க்கும் அதிகமான பண்ணையாளர்கள் உடனடியாக மீளவும் அவர்களுடைய பூர்வீக இடங்களுக்கு திரும்பி அவர்களது வாழ்வாதார தொழில்களை செய்வதற்கு வழி வகுக்கவேண்டும்என்று கோரிக்கை விடுப்பதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ்தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்னெ ☞ 8

## நீதித்துறை சுயாதீனத்தை வலியுறுத்தி உயர் நீதிமன்றம் முன் போராட்டம்

### சட்டத்தரணிகள் ஏற்பாட்டில் இன்று நடக்கிறது




(சண்முகம் தவசீலன்)

அனைவரையும் திரண்டு வருமாறுஅழைப்பு

நீதிபதிகளினதும் நீதித்துறையினதும் கௌரவத்தையும், சுயாதீனத்தன்மையையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ளசட்டத்தரணிகள் இன்று திங்கட்கிழமை கொழும்பு உயர்நீதிமன்றத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். முன்னெடுக்கவுள்ளனர். ☞ 2

## எத்தகைய தடைகள் வந்தாலும் மயிலத்தமடுவில் எம் மக்களின் உரிமைகள் கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

### நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சூளுரை

எந்ததடைவந்தாலும் எமது மக்களுக்கான உரிமைகிடைக்கும்வரை போராட்டம் தொடரும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் மயிலத்தமடுமாதவனை பண்ணையாளர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில்பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 2

## கிழக்கு மாகாணப் பொருளாதார அபிவிருத்திக்கு 10 ஆண்டுத் திட்டம்

### ஜனாதிபதி மட்டக்களப்பில் தெரிவிப்பு

திருகோணமலையின் அபிவிருத்தி உட்பட கிழக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு அடுத்த 10 வருடங்களில் விரிவான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

மகாவலி திட்டத்தில் விடுபட்ட 'ஏ' மற்றும் 'பி' வலயங்களை அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தைஅபிவிருத்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நிலாவெளி முதல் பானமவரையிலான விரிவான சுற்றுலாத் ☞ 8

## இந்தியாவுக்கோ சீனாவுக்கோ எமது கடலை தாரைவார்க்க மாட்டோம்

### தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு

எமக்குச்சொந்தமான கடற்பரப்பினை இந்தியாவுக்கோ, அல்லது சீனாவுக்கோ வழங்குவதற்கு நாம் இடமளிக்போவதில்லை. விசேடமாகதேசியமக்கள் சக்திஅனுமதிஅளிக்காது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரித்தார்.

வத்தளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சந்திப்பு செங்கலடி மத்திய கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அதிபரின் அறையில்தான் பண்ணையாளர்களைச் சந்தித்தார் ரணில். அவரது உடல் மொழி இந்தச் சந்திப்பை வேண்டா வெறுப்பாகவே அவர் மேற்கொள்வதைச் சுட்டிக்காட்டியது என்று தெரிவித்தார்கள்.

பிரச்சினைகள் குறித்து அவர் அக்கறையோடு எதனையும் செவிமடுக்கவில்லை. எல்லோருக்கும்தான் பிரச்சினை இருக்கின்றது, அதனை ஒரே மேசையில் இருந்து பேசித்தான் தீர்க்கவேண்டும். விரைவில் அப்படி ஒரு பேச்சு நடக்க ஏற்பாடு செய்கின்றேன் என்கிற வகையில் பேசி விடயத்தை அவசரமாக முடித்துவிட்டார்.

சந்திப்புக்குச்சென்றவர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்தது. தமது பிரச்சினைகள் என்ன என்பதைச் சரியான அக்கறையோடு காதுகொடுத்துக் கேட்டகக்கூட இல்லை என்று அவர்கள் ஆதங்கப்பட்டனர். ஏதோ ஒப்புக்கு அவர்கள் தரப்பில் ஒருவரைப் பேசவிட்டார் ரணில். அவர் கூறியதைக்கூட உள்வாங்கிக்கொண்டார் போன்று தோன்றவில்லை. பின்னர் எல்லாவற்றையும்ஒரே மேசையில் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று முடித்துக்கொண்டாராம்.

இதைக் கேள்விப்பட்டதும் எனக்கு 2013ஆம் ஆண்டு- ஞாபகத்திற்கு வந்தது. அப்போது ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சித் தலைவர்.

அந்தாண்டு பெப்ரவரி மாதம் 15ஆம் நாள் தெல்லிப்பளையில் தமிழ்த்தேசியக்கூ-ட்டமைப்பினரால் ஒரு பட்டினிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பந்தல் அமைத்துகூட்டமைப்புத்தலைவர்கள் உட்படப் பெருமளவிலானோர் அந்தப் பந்தலின் கீழ் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தெல்லிப்பளைக்கு வடக்கே, அப்போது இராணுவத்தினர் பெருமளவு காணிகளை உயர் பாதுகாப்பு வலயம் என்கிற பெயரில் தம் வசப்படுத்தி வைத்திருந்தனர். அந்தக் காணிகளில் இருந்து இராணுவம் வெளியேறி தமது சொந்த நிலங்கள் தங்களிடமே கையளிக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்துத்தான் பட்டினிப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

ராஜபக்ஷக்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தார்கள். ரணில் தேர்தல்களில் அவர்களிடம் படுதோல்விஅடைந்துகொண்டிருந்த காலம். எதிர்க் கட்சித் தலைவராக யாழ்ப்பாணம் வந்திருந்த ரணில், தனது பாதுகாவலர்கள் சகிதம் போராட்ட இடத்திற்கு வந்து மக்களோடு மக்களாக - கூட்டமைப்புத் தலைவர்களோடு தலைவர்களாக - அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

அதற்கு முன்னதாக, அன்று காலையில் போராட்டத்திற்குள் புகுந்து குழப்பம் விளைவிக்க படைத்துறையினர்முயன்றமையால் போராட்டக்களம்பதற்றமடைந்திருந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க அங்கே தரையில் அமர்ந்திருந்து போராட்டக்காரர்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

அதே ரணில்தான் இன்று ஜனாதிபதியானதும் மயிலத்தமடு மக்களை வேண்டா வெறுப்பாகச் சந்திக்கிறார். அவர்களின் பிரச்சினையை ஆற அமர இருந்து கேட்பதற்குக்கூட அவருக்குப் பொறுமையில்லை.

இவர்தான் இனமுரண்பாட்டைத் தீர்த்து நாட்டைக் கட்டியெழுப்பப் போகிறார் என்று சிலர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## மயில்தமடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும்அப்பகுதியில்பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டதோடு வீதித்தடைகள்போடப்பட்டுநீர்த்தாரை வாகனம்;, கண்ணீர்ப்புகைத் தாக்குதல் படைகள் ஆகியனவும் குவிக்கப்பட்டன.

அத்துடன், மயிலத்தமடு பண்ணையாளர்சங்கத்தின்தலைவர் உள்ளிட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட முடியாதவாறு பொலிஸார் நீதிமன்றில் தடையுத்தரவைப் பெற்றிருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அது காட்டப்பட்டதுடன், வீதியை மறித்துப் போராடமுடியாது எனவும் குறிப்பிட்டர். எனினும்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதித்தடைகளை உடைத்துக்கொண்டுமுன்னேறிச் செல்ல முற்பட்டபோது போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் கடுமையான முறுகல் ஏற்பட்டது.

போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும்இடையேபெரும் இழுபறி நிலையேற்பட்டதோடு இருதரப்பினருக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது.

இதன்போது தடையினையுடைத்துச்செல்ல முற்பட்ட மட்டக் களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவினர்சங்கதலைவி உள்ளிட்ட பெண்கள்மீதுபொலிஸார் தாக்குதல்களைமேற்கொண்டதோடு, ஏனையவர்களைவிரட்டும்முகமாக கால்களால் எட்டி உதைக்கும் செயற்பாடுகளையும் அவர்கள் மேற்கொண்டார்கள்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், பண்ணையாளர்கள், சட்டத்தரணி சுகாஸ் உள்ளிட்டவர்கள் பொலிஸாருடன்வாய்கத்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அதுமட்டுமன்றி ஏனையவர்களும், பௌத்த பிக்குகள் தொப்பியைக் கழற்றி வீசும்போது அமைதியாகவேடிக்கை பார்த்த பொலிஸார் எம்மை அடக்குகின்றார்கள்என்றுகோசங்கள் எழுப்பபட்டன.

இதன் காரணமாக, வாழைச்சேனை-மட்டக்களப்பு பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டதோடு மாற்று வழியூடாக போக்குவரத்துகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன் ,சீ.யோகேஸ்வரன், கோடீஸ்வரன் தமிழ்தேசியமக்கள்முன்னணியின் சட்டத்தரணி சுகாஸ், தேசிய அமைப்பாளர் சுரேஸ், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## மார்பகப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களை புதிதாகத் தொடங்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் '101 கலந்துரையாடல்' நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக் கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மேலும் கருத்துரைத்த வைத்திய நிபுணர் ஹசரலி பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

உலகிலும் இலங்கையிலும் பெண்களுக்கே அதிகளவில் மார்பகப் புற்றுநோய் ஏற்படுகிறது. அதனால் ஆண்களுக்கு அந்த நோய் தொற்றாது என்று கருதக்கூடாதெனவும், இருப்பினும் ஒப்பீட்டளவில் பெண்களுக்கே நோய் ஏற்படுவதற்கான அதிக சாத்தியங்கள் உள்ளன.

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களே 80 சதவீதம் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப் படுகின்றனர் என்பதோடு, குடும்ப வழியில் எவருக்கேனும் புற்றுநோய்இருத்தலும்நோய்க்கான சாத்தியங்களை அதிகப்படுத்தும். மரபணு திரிபுகளும் 15 சதவீத சாதகம் என்று குறிப்பிடலாம்.

முன்பு நோய்த் தொற்றுக்கு இலக்கானவர்களுக்கும், 30 வயதுக்குமுன்னதாகமுதல்குழந்தை பெற்றிருக்காதவர்களுக்கும்மார்பகப் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன. 11 வயதுக்கு முன்னதாக பூப்படைதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய மாற்றங்கள்55வயதுக்குபின்னரும் காணப்படுதல் என்பனவும் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியங்களாகக்காணப்படுகின்றன. இவற்றை எம்மால் மாற்றியமைக்க முடியாது.

உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களேஅதற்கானகாரணமாக அமைந்துள்ள அதேநேரம், ஹார்மோன்கள்அடங்கியகருத்தடை மாத்திரைகளை நீண்ட நாட்களாக பாவனைசெய்வோருக்கும்மார்பகப் புற்று ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகமாகும். இருப்பினும்தற்போது ஹார்மோன்களை கலப்புச் செய்து கருத்தடை மாத்திரைகள் உற்பத்திச் செய்யப்படுவதால்அந்தபாதிப்புக்கள் ஓரளவிட்டுமட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி விடயங்களில் மாற்றங்களை செய்ய முடியா விட்டாலும், பூப்படைதலின் பின்னர் ஏற்படும் அதிக உடல் எடை, உணவு முறைமை, உடற்பயிற்சி, மதுபானங்கள் மற்றும் சிகரெட் பாவனை உள்ளிட்ட மாற்றம் செய்யக்கூடியவிடயங்கள்தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

ஒவ்வொரு மாதத்திலும் உரிய தினத்தில் 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சுயமாக புற்றுநோய் பரிசோதனையை செய்துகொள்வது சிறந்தாகும். அது தொடர்பில் சுகாதார துறையினரால் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாரபகபுற்றுநோய்தொடர்பிலான சுய பரிசோதனைகளை செய்து கொள்ளும் போது, வலியுடன் கட்டிகள், தோல் தடிப்பு, நிறம் மாறல், தோற்றத்தில்மாற்றம், மார்பகங்களில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள் உள்ளிட்ட மாற்றங்களைவிரைவில் அறிந்துகொள்ளமுடியும். அதேபோல் கமக்கட்டுக்களில் ஏற்படும் கட்டிகள் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அறிகுறிகள் தெரியவரும் பட்சத்தில் வைத்தியரை நாடும் அதேநேரம் சுகவனிதையர் சிகிச்சைக்கும்செல்லமுடியும். அதற்கு மேலதிகமாக, நாராஹேன்பிட்டி, இரத்தினபுரி, மாத்தறை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் 05 புற்றுநோய சிகிச்சை நிலையங்கள்அமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், நாடாளாவிய ரீதியிலுள்ள அரச வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சை நிபுணர்களின் கீழ் 30 புற்றுநோய் சிகிச்சை நிலையங்களை புதிதாகத் தொடங்கப்படவுள்ளன. அவ்வறான இடங்களில் பரிசோதனைகளை செய்துகொள்ள முடியும்.

இலங்கையிலும் உலகத்திலும் புற்றுநோயாளர்களின்எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், உள்நாட்டில் அறியப்பட்டிருக்கும் 37,000 புற்றுநோயாளர்களில் 20,000பெண்கள்அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. அவர்கள்மத்தியில் மார்பக் புற்றுநோயாளர்களே அதிகம் உள்ளனர். 2020 அந்த நோயளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரமாக அதிகரித்திருப்பதோடு பெண்களில் 26 சதவீதமானவர்கள் மார்பக புற்றுநோய் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

இலங்கையில் மாத்திரமின்றி முழு உலகிலும் இதேநிலைதான் காணப்படுகின்றது. 2020இல் உலகில் 2.2 மில்லியன் மார்கப் புற்றுநோயாளர்கள் கண்டறியப்பட்டிருந்தனர். அதன் பாதிப்பு காரமாண உலக அளவில் 6,85,000பேர் உயிரிழந்துள்ளனர். இலங்கையிலும் 2019 ஆம் ஆண்டு மார்பகப்புற்றுநோயினால் 784பேர் உயிரிழந்துள்ளமையும்அவர்களில் 18ஆண்களும்அடங்குவர்என்பதும் குறிப்பிடத்தக்கது.

தவிர்த்துக்கொள்ளக்கூடிய ஏனைய பல புற்றுநோய்கள் முறையற்றஉணவுப்பழக்கங்களின் விளைவாகவே ஏற்படுகின்றன. அதனால் முடிந்த வரையில் துரித உணவுகளிலிருந்து விடுபடுவதே அதற்குரிய சிறந்த தீர்வாகும். கோதுமை மா புற்றுநோய்க்கான சாதக காரணியாக அமையாவிட்டாலும் அதனால் ஏற்படுத்தப்படும் அதிக எடை புற்றுநோய்க் காரணிகளை தோற்றுவிக்கும்.

அதனால் பெரியவர்கள் நாளாந்தம் அரை மணித்தியாலம் என்ற அடிப்படையில் வாரத்தின் ஐந்து நாட்களில் உடற்பயிற்சியில் ஈடுபடுவதோடு, வெற்றிலை, பாக்கு ஆகிய இரு பொருட்களும் புற்றுநோய்க் காரணிகள் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டியது அவசியம். அவற்றின்பாவனையைதவிர்ப்பதன் மூலம் வாய் மற்றும் நுரையீரலை அண்டியதாகஏற்படும்புற்றுநோயை ஆண்கள் தவிர்த்துகொள்ள முடியும் - என்றார்.

## இஸ்ரேலிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருகின்றது.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அயல்நாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கின்றது - என்றார்.

## மயிலத்தமடுவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும்தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழர்களுக்கு ஒருநீதியும், சிங்களவர்களுக்கு ஒரு நீதியும்காணப்படுகின்றதுஎன்பதை வெளிப்படுத்துவதற்காகவேவீதியில் இறங்கிப் போராடுகின்ற நிலைமை எமக்கு தற்போது ஏற்பட்டுள்ளது.

எமது பண்ணையாளர்கள், மேய்ச்சல்தரைக்குச்செல்கின்றபோது, அங்கே பெரும்பான்மையினர் உழவு இயந்திரங்களுடன் செயற்படுகின்றபோது அவர்கள் எவ்வாறு அவ்விடத்தில் தமது கால்நடைகளை நிறுத்துவது என்ற கேள்வி உள்ளது.

உரிமை இழந்தோம் காணி களையும் இழந்தோம் உணர்வை இழக்கலாமா. தோல்விநிலையென நினைத்தால் தன்மான தமிழன் வாழ்வைநினைக்கலாமா என்பதே பெரும் கேள்வியாக உள்ளது.

மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை அகிம்மை வழி போராட்டத்தில் பொலிஸார் கெடுபிடிகளை பிரயோகிக்கின்றார்கள். பெண்களை தொடக் கூடாத இடத்தில் தொடுகின்றார்கள், ஆண்களை உதையக்கூடாத இடங்களிலும் உதைகின்றார்கள்.

அவர்களின் கொடுபிடிகளுக்கு மத்தியில்பண்ணையாளர்களுடன் போராட்டக்களத்தில் நாம் இணைந்துள்ளோம். எமக்கு மாவட்டச்செயலாளரால், இராஜாங்க அமைச்சரால், மகாவலி அதிகார சபையால்நீதிவழங்கப்படவில்லை.

ஆகவே, இந்த நிலைமைகள் தொடர்வதற்கு அனுமதி அளிக்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்திற்கு உரிய பதில் அளிக்க வேண்டும் - என்றார்.

## நீதித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




நாட்டின்நீதிமன்றசுயாதீனத்தை உறுதிப் படுத்துமாறும், நீதிபதிகள் மற்றும் நீதிக்கட்டமைப்பின் கௌரவத்தைப் பாதுகாக்குமாறும், முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவுக்கான நீதியை நிலைநாட்டுமாறும் வலியுறுத்தி முன்னெடுக்கப்படவுள்ள இப்போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நாடளாவிய ரீதியிலுள்ள சட்டத்தரணிகளுக்கும் சட்டத்தரணிகள் அல்லாதோருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் அனைவரினதும் பங்கேற்பானது, நீதிக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாப்பதில் அனைவரும் ஒன்றிணைந்து நிற்பதைக் காண்பிக்கும் என்று முல்லைத்தீவு சட்டத்தணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## இந்தியாவுக்கோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும்தெரிவித்ததாவது:

பிரதமர் தினேஷ் குணவர்த்தனஇந்திய ஊடகமொன்றுக்கு வழங்கியசெவ்வியின்போது, இந்திய மீனவர்களுக்குஅனுமதிப்பத்திரத்தின் கீழ் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான கோரிக்கைக்கு அமைவாக அனுமதி வழங்கப்படுமா என்ற வினாவிற்கு பதிலளிக்கின்றபோது அந்த கோரிக்கையைபரிசீலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின்வளங்களைவிற்பனை செய்யும் ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது மீன்பிடி வளத்திற்கான அனுமதியை இந்தியாவுக்கு வழங்குவதற்கு தயார் என்று குறிப்பிடுகின்றனர்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2015இல் மன்னாருக்குச் சென்று கடலைப் பார்த்துக் கூறினார், இந்திய மீனவர்கள் எல்லை தாண்டினால் துப்பாக்கிச்சூடு நடத்துவோம் என்றளார செய்வோம் என்றார்.

அவ்வாறு கூறிய நபர் தான் தற்போது இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரத்தின் கீழ் மீன் பிடிப்பதற்கு இடமளிக்கப்போவதாக அறிவிப்பதற்கு தயாராகின்றார்.

எமக்குச் சொந்தமான கடற்பரப்பினை இந்தியாவுக்கோ, அல்லதுசீனாவுக்கோவழங்குவதற்கு நாம் இடமளிக்போவதில்லை. விசேடமாக தேசிய மக்கள் சக்தி அனுமதி அளிக்காது. மக்களுடன் இணைந்துஎமதுகடல்வளத்தினைப் பாதுகாப்பதற்காக போராடுவோம்.

## இந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தோனேசியாவின் அரசியல் சட்டம் மற்றும் அரசியல் விவகார அமைச்சரின் ஆலோசகர் ஆடம் முலவர்மன் டுகுவோ, ஈரான் அயலுறவு அமைச்சர் ஹொசைன் அமீர் - அப்துல்லாஹியன், மலேசியாவின்அயலுறவுஅமைச்சர் டத்தோ. செரி திராஜா சம்பரி அப்துல் காதிர், மொரீஷியஸின் அயலுறவு, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மனீஷ் கோபின், ஓமன் அரசியல் விவகாரங்களுக்கான உப செயலாளர் ஷேக் கலபா பின் அலி பின் இசா அல்-ஹார்த்தி, சிங்கப்பூர் பிரதமர் அலுவலக அமைச்சரும் கல்வி மற்றும் வெளிவிவகார இரண்டாவது அமைச்சருமான கலாநிதி முகமது மாலிகி பின் ஒஸ்மான் தென்னாப்பிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர்கலாநிதி(திருமதி)நலேண்டி பாண்டோர் தாய்லாந்தின் அயலுறவு துறை துணை அமைச்சர் சிஹாசக் புவாங்கெட்கியோ, ஐக்கிய அரபு இராஜ்ஜிய பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்கள் உதவி அமைச்சர்சயீத்முபாரக்அல்ஹஜெரி, யெமன்அயலுறவுபிரதமஅமைச்சர் அவ்சன் அப்துல்லா அஹமட் அல்-ஆவுத், ஆகியோர் கொழும்பில் நடைபெறும் அமைச்சர்கள் குழு கூட்டத்தில்கலந்துகொள்ளவுள்ளனர்.

ஜப்பான் அயலுறவு துணை அமைச்சர் மசாஹிரோ கொமுரா கொரியா அயலுறவு அமைச்சின் அரசியல் விவகாரங்கள் துணை அமைச்சர் சுங் பியுங்-வோன், ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசிபிக் அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியன் ஆகியோரும் இந்த கூட்டத்தில் இணையவுள்ளனர்.

அமைச்சர்கள் குழு என்பது இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் மிக உயர்ந்த அமைப்பாகும். தற்போதைய தலைவரான பங்களாதேஷ் அயலுறவுஅமைச்சர்இலங்கையின் அயலுறவு அலுவல்கள் அமைச்சிடம்தலைமைப்பதவியை வழங்கும்போது, அயலுறவு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி சபைக்கு தலைமை தாங்குவார்.

இந்தக்கூட்டத்திற்கு முன்னதாக, அயலுறவு செயலாளர் அருணி விஜேவர்தன தலைமையில் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் மூத்த அதிகாரிகள் குழுவின்25ஆவதுகூட்டம்இன்றும் நாளையும் நடைபெறுகின்றது.


1997 இல் நிறுவப்பட்ட இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கம், இந்துசமுத்திரத்தின்எல்லையிலுள்ள அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். அதன் உறுப்பினர்கள் ஆபிரிக்கா, மேற்கு ஆசியா, தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஓசியானியா வரை பரவியுள்ளனர். இன்று, இந்துசமுத்திர

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட யானை வேலி முல்லைத்தீவில் அறிமுகம்






இலங்கையில் முதல் முதலாக ஐ வடிவிலான யானை பாதுகாப்பு வேலி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் பாடசாலை ஒன்றுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் உயிர்த்துறை திணைக்களத்தின் தலைவரும் விரிவுரையாளருமான கலாநிதி விஜயமோகனின் எண்ணத்தில் வடிவமைக்கப்பட்ட யானை பாதுகாப்பு வேலி (தொங்குவேலி) இலங்கையில் முதல் முறையாக முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் அ.த.க.பாடசாலையை யானையில் இருந்து பாதுகாப்பதற்காக அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு வெள்ளிக்கிழமை நடை பெற்றது. வவுனியா பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 10 லட்சம் ரூபா செலவில் இந்த யானை பாதுகாப்பு வேலி அமைக் கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழத்தின் போராசிரியர் காமினி செனநாயக்கா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மங்களேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன் பாடசாலை வளாகத்தைச் சூழ அமைக்கப்பட்ட யானை வேலியை வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளார்கள்.

இரண்டு கிலோமீற்றர் நீளம் கொண்டு இந்த யானை வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிராம அலுவலகர், பாடசாலை சமூகம் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன், நிகழ்வில் யானை மனித மோதல், அதில் இருந்து மனிதர்கள் எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது, யானைகளை எவ்வாறு பாதுகாப்பது போன்ற விடயங்கள், கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த யானை வேலிகளை யானைகள் எவ்வாறு உடைத்து சேதப்படுத்தி உள்நுளைந்தன. புதிதாக வடிவமைக்கப்பட்ட தொங்கு வேலி பரீட்சித்து பார்த்தபோது அதனால் யானைகள் உள்நுளையாமல் இருக்கின்றமை போன்ற விளக்கங்கள் காட்சிகள் ஆதாரங்கள் மூலம் கலாநிதி விஜயமோகனால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (05)

# இராணுவத்தினர் வெளியேறியதை அடுத்து வடக்கில் தமது காணிகளுக்கு வேலி அமைக்கும் பொதுமக்கள்





யாழ்ப்பாணம் காங்கேசன் துறை, மாங்கொல்லை பகுதியில் இராணுவத்தினர் வெளியேறிய பிரதேசங்களில் உள்ள தமது காணிகளை அறிக்கைப்படுத்தும் நடவடிக்கைகளில் காணி உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக மாங்கொல்லை பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. அந்நிலையில் கடந்த ஜூன் மாத கால பகுதியில் அப்பகுதியில் இருந்த நிலைகொண்டு இருந்த இராணுவத்தினர், அங்கிருந்து வெளியேறினர்.

இராணுவத்தினர் வெளியேறிய போதிலும் அப்பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படாததால், மக்கள் மீள் குடியேற முடியாத நிலைமை காணப்பட்டது.

அதனால் அப்பகுதி ஆள்களற்ற சூனிய பிரதேசமாகக் காணப்பட்டமையைத் திருட்டுக் கும்பல்கள் தமக்குச் சாதகமாக அதனைப் பயன்படுத்தி வீடுகளை உடைத்து, கதவு, ஜன்னல்கள், அதன் நிலைகள் மற்றும் இரும்புகள் என்பவற்றைக் களவாடிச் சென்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் பிரதேச செயலகம் என்பவற்றில் முறையிட்டும், திருட்டு கும்பல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதனை அடுத்து , தம்மை மீள் குடியேற தற்போது அனுமதிக்கா விடினும், எங்கள் காணிகளை எல்லைப்படுத்தி காணிகளை அறிக்கைப்படுத்த அனுமதிக்க வேண்டும் என கடிதம் மூலம் தெல்லிப்பழை செயலரிடம் கோரப்பட்டதை அடுத்து வேலி அடைப்பதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து காணி உரிமையாளர்கள் தமது காணிகளை எல்லைப்படுத்தி வேலிகளை அடைத்து வருகின்றனர்.

அதேவேளை, கடந்த 33 வருட காலமாக இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியினுள் காணப்பட்ட மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய புனரமைப்பு பணிகளையும் அப்பகுதி மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

இராணுவத்தினர் எமது காணியில் இருந்து வெளியேறி 3 மாத காலத்திற்கு மேலாகியும் எமது சொந்த காணிகளில் மீள் குடியேற இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை. எனவே எம்மை மீள் குடியேற்ற சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

(05)

# காலி மாவட்டத்தில் அதிக மழை வீழ்ச்சி

காலி மாவட்டத்தில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

காலி மாட்டத்தில் கினிதும என்ற பகுதியில் 181.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாலை வேளையிலும் 100 மில்லி மீட்டர் மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக வளிமண்ட லவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## எல்ல – வெல்லவாய பிரதான வீதியில் ஓட்டோ – லொறி விபத்து; ஒருவர் சாவு

எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்ல - வெல்லவாய பிரதான வீதியின் ராவணா எல்ல பகுதியில் சனிக்கிழமை காலை ஓட்டோ ஒன்று லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்ல - வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பாதுக்க - ஹொரணை வீதியில் வாகன விபத்து; சாரதி காயம்





குருநாகல் பிரதேசத்தில் இருந்து கரந்தெனியாவிற்கு கறுவாப்பட்டைகளை ஏற்றிச் சென்ற வாகனமொன்று பாதுக்க – ஹொரணை வீதியில் மின்கம்பத்துடன் மோதி அருகில் உள்ள கால்வாயில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த சம்பவம் சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்றது.

இந்த விபத்தில் வாகன சாரதிக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளது. (05)

# நிகழ்நிலை காப்பு சட்டமூலம் குறித்து இலங்கை மீளவும் சிந்திக்கவேண்டும்

## சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வலியுறுத்து

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் குறித்து இலங்கை மீளசிந்திக்கவேண்டும் என சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.'

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் கருத்து சுதந்திரத்தின் மீது ஏற்படுத்துகின்ற தாக்கம் காரணமாக அரசாங்கம் இந்த சட்டமூலம் குறித்து மீள சிந்திக்கவேண்டும் என சர்வதேச அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஒக்ரோபர் இரண்டாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் இணையவெளியில் கருத்துசுதந்திரம் மற்றும் தகவல் சுதந்திரத்தைப் பாதிக்கின்றது என விமர்சனங்கள் வெளியாகியுள்ளன. பிழையான அறிக்கைகளை வரைவிலக்கணப்படுத்தி ஒழுங்குபடுத்தி சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கான அதிகாரம் புதிய ஆணைக்குழுவொன்றிற்கு வழங்கப்படவுள்ளது என சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம், இலங்கை சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உட்பட பல அமைப்புகள் இலங்கை அரசாங்கம் இந்த சட்டமூலத்தை உடனடியாக விலக்கிக்கொள்ளவேண்டும், ஊடகத்துறைசார்ந்தவர்களுடன் உடனடியாக இது குறித்து முழுமையான மறுஆய்வை மேற்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மயிலத்தமடு மக்களுக்கு வடக்கின் முழு ஆதரவு தேவை

மட்டக்களப்பு மயிலத்தமடு பண்ணையாளர்களின் பிரச்சினை நீறுபூத்த நெருப்பாக நீண்ட காலமாக இருந்து வந்தது. இப்போது தீப்பற்றிக் கொண்டுள்ளது. இந்த மக்களின் பூர்வீகத் தொழில் மாடு வளர்த்தல். இயற்கையான மேய்ச்சல் நிலங்களில் மாடுகளைத் திறந்துவிட்டு வளர்க்கும் வளர்ப்ப முறையில் இவர்கள் மாடுகளை வளர்க்கிறார்கள். அப்படிப் பெரும் பட்டிகளை வைத்திருக்கும் இந்த மக்களின் மேயச்சல் நிலத்தை கடந்த சில வருடங்களாகச் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பிக்குகள் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினரின் ஆதரவுடன் சிங்களவர்கள் இங்கு குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். விவசாயம் செய்யப்போகிறார்கள் என்கிற அடிப்படையில் அவர்கள் நாட்டின் வேறு பகுதிகளில் இருந்து இங்கு கொண்டு வரப்பட்டுள்ளார்கள். விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு நிலம் தேவையாக இருக்கின்றது. அதற்காக மயிலத்தமடு பண்ணையாளர்களின் மேய்ச்சல் நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

மாடுகள் மேய்ச்சல் நிலத்திற்குச் சென்றால் அவற்றை வெட்டுவது, திருடுவது பண்ணையாளர்களை அச்சுறுத்துவது என்று தொடர்ச்சியாக சிங்களவர்களின் செயற்பாடுகள் அமைந்து வருகின்றன. இதனால் மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப முடியாமல் பண்ணையாளர்கள் பெரும் துன்பமடைந்துள்ளனர்.

நாட்டின் இறைச்சி உற்பத்தில் 60 சதவீதம் வடக்கு கிழக்கில் இருந்துதான் பூர்த்தி செய்யப்படுகின்றது. இங்குதான் உள்ளூர் மாடு மற்றும் ஆடுகள் பெரும் பட்டிகளாக வளர்க்கப்படுகின்றன. பாலுற்பத்தி குறைந்த இந்த இனங்கள் பெரும்பாலும் இறைச்சித் தேவைக்கே பயன்படுத்தப்படுகின்றன. மயிலத்தமடு அப்படிப்பட்ட பண்ணை உற்பத்தியின் முக்கியமான ஓரிடம்.

சிங்களவர்கள் கொள்கையளவில் மாட்டிறைச்சி உண்பவர்கள் அல்லர். மாடுகளைக் கொல்வது பாவம் என்று நினைக்கிறவர்கள். பசு வதையைத் தடுக்கவேண்டும் என்கிற அளவில் காருண்யம் கொண்டவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்பவர்கள். இத்தகைய பின்னணிகளோடு இணைத்துத்தான் இந்தப் பிரச்சினையைப் பார்க்கவேண்டியிருக்கிறது.

வடக்கு கிழக்கில் தமிழர்களின் பொருளாதாரத்தின் முதுகெலும்பை முறிப்பதுடன் அந்த இடங்களை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதன் மூலம் கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கும் ஒரே மாவட்டமான மட்டக்களப்பின் இனப்பரம்பலைச் சீர்குலைப்பதே மயிலத்தமடு இலக்கு வைக்கப்பட்டிருப்பதன் அடிநாதமாக இருக்கின்றது. அதுதான் இப்போது பெரும் பிரச்சினையாகக் கிளம்பியிருக்கின்றது.

இந்த விடயத்தில் அனைத்துத் தரப்பினரையும் ஒரே மேசையில் இருத்திப் பேசி ஒரு தீர்வை காணப்போவதாக அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். ஆனால், அவரது வாக்குறுதிகளுக்கு என்ன நடக்கும், பிரச்சினை தீருமா என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இந்தப் பிரச்சினையில் பேரினவாத உள்நோக்கங்கள் இருக்கும்போது அனைத்துத் தரப்புப் பேச்சுக்கள் வெற்றியளிப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவானவையே.

அதிகளவு அழுத்தம் மட்டுமே மயிலத்தமடு மக்களுக்குத் தற்காலிகத் தீர்வுகளையாவது பெற்றுத் தரும். அதற்கு வடக்கில் இருந்து அந்த மக்களுக்கு அதிகளவில் ஆதரவு கிடைக்கவேண்டியது அவசியம். வடக்கு அரசியல்வாதிகளும் மக்களும் பெருமளவில் மயிலத்தமடு மக்களுக்காக ஒன்று திரள்வதன் மூலமே அவர்களையும் அவர்களின் நிலங்களையும் தமிழர்களின் பொருளாதாரத்தையும் காப்பாற்ற முடியும்.



# அபோரிஜின பழங்குடியினரின் உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?

## ஆஸியில் குரல் வாக்கெடுப்பு

ஐங்கரன் விக்கினேஸ்வரா



ஹைலைட்டாக இதைப்போடவும் : (பழங்குடியினரின் குரல் மீதான முக்கிய வாக்கெடுப்புக்கு தயாராகும் அவுஸ்திரேலியாவில் அபோரிஜின பழங்குடியின உரிமையும், கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெற்றிகரமான வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பதும் உண்மையே)

ஆஸ்திரேலியாவின் மக்கள் எண்ணிக்கை 26 மில்லியன். இதில் பழங்குடி அவுஸ்திரேலியர்கள் சுமார் 3 வீதம் மட்டுமே. ஆனால் அதிகாரப்பூர்வ தரவுகள், இந்நாட்டின் சிறைவாசிகளில் கால்வாசிப் பகுதியினர் இவர்கள்தான் என்கின்றன. சிறிய குற்றங்களுக்காகவே பலர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.




### பழங்குடியின மக்கள் அபோரிஜினர்

ஆஸ்திரேலியாவில் பல நூற்றாண்டுகளாக வாழும் பழங்குடியின மக்கள் அபோரிஜின்ஸ்(Aborigins). இவர்களுக்கு இதுவரை அரசமைப்பு ரீதியாக அங்கீகாரம் கிடைக்கவில்லை. இதனால் தேசியக் கொள்கை வகுப்பில் எந்தப் பங்களிப்பும் இன்றி இருந்து வருகின்றனர்.

அதை மாற்றும் முயற்சியின் முதல்படியாக, பழங்குடியின மக்கள் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவில் வசிக்கும் மக்களுக்கு அரசமைப்பு அங்கீகாரம் வழங்க வேண்டுமா, என்பதை தீர்மானிக்க மக்களிடையே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

பழங்குடியினருக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்து ஆஸ்திரேலியாவில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக வெற்றிகரமான வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இந்த வாக்கெடுப்பு வெற்றிபெற, பெரும்பான்மையான அவுஸ்திரேலியர்கள் 'ஆம்' என்று வாக்களிக்க வேண்டும், மேலும் 6 மாநிலங்களில் 4 ஆதரித்து பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும்.

ஆஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களின் உரிமைகளை நிர்ணயிக்க வாக்கெடுப்பு (Indigenous voice to parliament referendum) நடத்துவது தொடர்பான சட்டவரைவு கடந்த ஜீன் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

தற்போது பழங்குடியினரின் குரல் மீதான முக்கிய வரலாற்றுசிறப்புமிக்க வாக்கெடுப்பு ஒக்டோபர் 14 அன்று நடைபெற வுள்ளது.

### ஆஸ்திரேலிய பழங்குடியின உரிமை

ஆஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களுக்கு நாடா ளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்தும், ஆஸ்திரேலியா பழங்குடியினர் உரிமைகள் (Australia Indigenous rights) மீதான வரலாற்றுச் சிறப்புமிக்க வாக்கெடுப்புமாக ஒக்டோபர் வாக்கெடுப்பு அமையும். இதில் பழங்குடியினர் வெற்றிபெற்றால், அவர்கள் ஆஸ்திரேலிய அரசமைப்பால் முழுமையாக அங்கீகரிக்கப்படுவார்கள்.

மேலும், இவர்களுக்கு நாடாளுமன்றத்தில் ஆலோசனை வழங்க நிரந்தர பிரதிநிதி உருவாக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இந்த திட்டம் ஆஸ்திரேலியாவில் பரபரப்பாக பேசப்படும் தலைப்பு ஆகும்.

ஆஸ்திரேலியாவில் பழங்குடி மக்கள் மிகத் தொன்மையான வாழ்க்கை வாழ்ந்து உள்ளனர். அது தொடர்பில் இதுவரை பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் லெஜெமுங்கோ (Laje Mungo) எனும் இடத்தில், 40,000 ஆண்டுகளுக்கு முன், ஆஸ்திரேலியப் பழங்குடிகள் வாழ்ந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன.

இருப்பினும் வேறு பல ஆய்வும் செய்யப்பட்டு உள்ளன. 60,000 ஆண்டுகளுக்கு முன்னரே, ஆதி மனிதர்களும் இங்கு வாழ்ந்து இருக்கின்றார்கள் என்றும் நிரூபிக்கப்படுகின்றது. இந்தப் பழங்குடிகளின் உறவும், தொடர்பும் பிற நாட்டு மக்களின் மரபணு, மொழி அடிப்படையில் உறுதி செய்யப்பட்டும் உள்ளன. கதைகள், நம்பிக்கைகள், பாட்டுக்கள் மூலமாகவே அவை தெரிய வருகின்றன.

ஆஸ்திரேலியாவின் எழுதப்பட்ட வரலாறு 1606ஆம் ஆண்டிலிருந்தே கிடைக்கின்றன. அவ்வாண்டு ஸ்பானிய அரசு கப்பலில் பெட்ரோ பெர்னாண்டசு தெக்யூரோசு என்ற போர்த்துகீசிய மாலுமி இங்கு வந்தார். 1642ஆம் ஆண்டில் டாஸ்மானியா, நியூசிலாந்து மற்றும் ஃபிஜி தீவுகளை கண்டறிந்ததோடன்றி ஆஸ்திரேலியாவின் முழுமையான நிலவரைப்படத் தயாரிப்பிற்கு பெருதும் பங்காற்றினார்.

### தொன்மையான பழங்குடி மக்கள்

பின்னர் 1644ஆம் ஆண்டு மூன்று கப்பல்களுடன் வந்த அவர் நியூ கினியின் தெற்கு கடற்கரையிலிருந்து மேற்காகச் சென்றார். நியூ கினியையும் ஆஸ்திரேலியாவையும் பிரிக்கும் டொரெஸ்நீரிணையைதொடர்ந்து சென்று அவுஸ்திரேலியாவின் வடக்கு கடற்கரையை முழுவதுமாக கண்டறிந்ததுடன் அங்குள்ள நிலம் மற்றும் மக்களைப் பற்றியும் குறிப்புகள் எழுதினார்.

இவ்வாறான கடற்பயணங்களுக்குப்பிறகும் ஆங்கிலேயர்களின் வரவு வரை பிற ஐரோப்பியர்கள் இங்கு பெரிதும் வரவில்லை.

1770இல் பிரித்தானியர்கள் அவுஸ்திரேலியாவினை பற்றி அறிந்து கொண்டார்கள். ஆஸ்திரேலியாவின் வரலாறு என்பதே பிரித்தானிய குடியேற்றம் மற்றும் பழங்குடிகளை எதிர்கொண்ட முறை குறித்து சார்புள்ள

(8ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டிலேயே இருந்தபடி சகலரும் சவால்களுக்கு முகங்கொடுங்கள்

## கல்வி அமைச்சர் சுசில் வேண்டுகோள்

திறமைசாலிகள் செய்ய வேண்டியது நாட்டைவிட்டுவெளியேறுவது அல்ல. திறமையைப்பயன்படுத்திநாடு ஓர் இடத்தில் விழுந்துள்ளது என்றால் அதனைக் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்க வேண்டும்.

நாட்டில் இருக்குமாறு அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன். நாட்டிலிருந்து சவால்களுக்கு முகங்கொடுங்கள்.

சவாலுக்கு முகங் கொடுக்க முடியாது எனின் கற்ற கல்வியை முறையாகக் கற்கவில்லை என்றே பொருள்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள், அதிபர்களுக்கான பிரதிபாபிரநாமவிருதுவழங்கும்விழா கல்வியமைச்சில் நடைபெற்றது.


இதன்போது 9 மாகாணங்களை சேர்ந்த 91 அதிபர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்தவிழாவில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

உண்மையில் நாட்டில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டது. இருப்பினும் இந்தப் பிரச்சினையை குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துகொண்டுசெல்கிறோம். பட்டதாரிகளை ஆசிரியர்களாக உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு நியமனங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வித்திணைக்களங்களும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தற்போது 5 ஆயிரத்துக்கும் அதிக பட்டதாரிகளை விஞ்ஞானம், கணிதம், தொழிநுட்பம்மற்றும்சுவதேசமொழி பாடங்களுக்காக உள்ளீர்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.



மேலும் திறமைசாலிகள் செய்யவேண்டியது நாட்டை விட்டு வெளியேறுவது அல்ல. திறமையைப் பயன்படுத்தி நாடு ஓர் இடத்தில் விழுந்துள்ளது என்றால் கட்டியெழுப்பதற்கு அதனைப் பயன்படுத்த வேண்டும். நாட்டில் இருக்குமாறு அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்.

நாட்டிலிருந்து சவால்களுக்கு முகங்கொடுங்கள். சவாலுக்கு முகங் கொடுக்க முடியாது எனின் கற்ற கல்வி முறையாகக் கற்க வில்லை என்றே பொருள்படும். இவர்கள் அனைவரும் திறைமைசாலிகளானது நாட்டில் சாதாரண மக்கள் உழைக்கும் பணத்திலேயே ஆகும்.

கல்விக்கும், உயர்கல்விக்கும் ஒதுக்கி உள்ள பணம் யாருடையேனும் தனிப்பட்ட பணமல்ல. இவ்வாறானவர்கள் அனைவரையும் மீட்டெடுக்க வேண்டிய வேலையையே திறமைசாலிகள் மேற்கொள்ள வேண்டும். இங்கு மாத்திரமல்ல உலகில் பல நாடுகள் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டன. இருப்பினும் அவர்கள் மீண்டும் மீட்சி நிலைக்கு வந்தனர். இதுவே நிலைமை. -என்றார். (05)



## புத்தளம் பகுதியில் ஓட்டோ விபத்தில் பெண் உயிரிழப்பு

புத்தளம் மனத் தீவு பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

புத்தளத்திலிருந்து 6 ஆம் கட்டை நோக்கிப் பயணித்த ஓட்டோ, முன்னாள் மாடு ஒன்று குறுக்கால் பாய்ந்தமையால் ஓட்டோவைக் கட்டுப்படுத்த முற்பட்ட போது வீதியை விட்டு விலகி மதிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது ஓட்டோவில் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழுந்துள்ளதுடன் ஓட்டோவின் சாரதி மற்றும் இரண்டு சிறுவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு விபத்தில் சிக்கி காயங்களுக்குள்ளாகிய ஓட்டோவின் சாரதி மற்றும் சிறுவர்கள் இருவரும் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் சிக்கி உயிரிழந்தப் பெண் 40 வயதுடைய புத்தளம் பகுதியைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அரையில் வைக்கப்பட்டுளதுடன், விபத்து சம்பவம் தொடர்பில் விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத்தெரிவித்தனர். (05)

## ஒருகொடவத்தையில் தொழிற்சாலையில் தீ

கொழும்பு ஒரு கொடவத்தை பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் தீ விபத்து இடம் பெற்றுள்ளது.

குறித்த தீயை அணைக்க 07 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பிவைக்கப்பட்டு தீப்பரவல்கட்டுக்குள்வந்ததாக தியணைப்பு சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

## காங்கேசன்துறையில் பாதுகாப்பு உத்தியோகத்தரை கட்டிப் போட்டுவிட்டு இரும்பு திருடியவர் கைதானார்

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை கட்டிப் போட்டு விட்டு யாழ்ப்பாணம், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இரும்புகளைதிருடியஇளைஞர் ஒருவரை வெள்ளிக்கிழமை இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையை காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது காங்கேசன்துறை நல்லிணக்கபுரம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். இது குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்து-வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swshpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# புத்திஜீவிகள் வெளியேற்றம் எதிர்கால சந்ததிக்கு மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்துமாம்

## எச்சரிக்கிறார் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்



புத்திஜீவிகளின் வெளியேற்றம் நாட்டின் எதிர்காலத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். ஒரு நாடாக நாம் இந்த விடயத்தை உடனடியாகவும் பொறுப்புடனும் கையாளத் தவறினால், அது எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை இருளடிக்கும் அபாயம் இருக்கிறது என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இன்று நம் நாடு எதிர்கொள்ளும் புத்திஜீவிகள் வெளியேறும் சவாலின் தீவிரத்தன்மையை இதற்கு பொறுப்பான அனைவரும் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த விடயத்தின் அபாயம் மேலோட்டமாகத் தெரியவில்லையென்றாலும், ஒரு நாடாக நாம் இவ்விடயத்தை உடனடியாகவும் பொறுப்புடனும் கையாளத் தவறினால், அது எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை இருளடிக்கும் பெரும் சோகமாக மாறக்கூடும்.

நமது நாட்டின் பொருளாதாரம் தொடர்பான பல்வேறு துறைகள் பெரும் சரிவை சந்தித்துள்ளதையும், இலவச சுகாதாரம், நமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் தொடர்பான கல்வித் துறைகள் போன்ற மனித வாழ்வுடன் தொடர்புடைய அத்தியாவசிய துறைகள் நாங்கள் கற்பனை செய்ய முடியாத துரதிர்ஷ்டவசமான நிலைக்கு வந்திருப்பது ஆபத்தின் விளிம்பில் இருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் நாடுபூராகவும் மக்கள் வாழ்வதற்காக முன்னெடுக்கும் போராட்டங்களை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தப் பின்னணியில், வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், நம் நாட்டில் உள்ள திறமையான புத்திசாலிகள், திறமையான இளைஞர்கள் பாரியளவில் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றமையை நாம் அனைவரும் அறிவோம். இது தொடர்பாக 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை இதனை உறுதிப்படுத்துகிறது. 2022 இல் 311,056 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்காக சென்றுள்ளனர். இது 2021 இல் வெளியேறிய 122,264 பேருடன் ஒப்பிடும்போது 154.4 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

மேலும், அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகள், ஊழல் மோசடி முதலாளித்துவம் மற்றும் சாமானிய மக்களின் துயரங்களைப் பற்றிய உணர்வின்மை போன்ற காரணங்களால் இந்த நாட்டில் தொடர்ந்தும் வாழ முடியாத நிலையிலேயே பத்திஜீகளின் வெளியேற்றம் இடம்பெற்று வருகிறது.

2023 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஒகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ தரவுகளின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் 750 விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து இராஜினாமா செய்துள்ளனர்.

இலங்கையில் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தி நிலை, எமது நாட்டின் உயர்கல்வி மற்றும் எமது எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் இருக்கிறது. அதனால் நாங்கள் எதிர்கொண்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வுகாண, இது தொடர்பில் தொழிற்சங்கள் முன்வைத்திருக்கும் பிரேரணைகள் தொடர்பில் அரசாங்கம் உடனடிகவனம் செலுத்த வேண்டும். - என்றார். (05)

# நுவரெலியா- ஹக்கலயில் கனரக வாகனம் குடைசாய்ந்து விபத்து



நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நுவரெலியாவிலிருந்து பதுளை நோக்கி பயணித்த லொறியொன்று ஹக்கல பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின்போது லொறியின் சாரதி மற்றும் அவரின் உதவியாளர் இருந்ததாகவும் சாரதி மாத்திரம் காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த வீதியில் உள்ள வளைவு ஒன்றில் செங்குத்தான பகுதியில் பிரதான வீதியை விட்டு விலகி லொறியின் கட்டுப்பாட்டை இழந்து தடுப்பு வேலியையும் உடைத்துக் கொண்டு சுமார் 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாக மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் ஏற்பட்டதை கருத்தில் கொண்டு அங்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் பல வீதித்தடைகளை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# அபோரிஜின பழங்குடியினரின்.......

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

தகவல்களை அடிப்படையாகவே கொண்டுள்ளது. ஐரோப்பியர்கள் இங்கு வரும் முன்னரே சீனத்தின் புகழ்பெற்ற கடற் தளபதி செய்ங் ஹெயின் கடற்படை பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இங்கு வந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

### மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள்

ஆஸ்திரேலியாவின் பழங்குடியின மக்கள் அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டுமா என்பது குறித்த வாக்கெடுப்பு குறித்து பேசியுள்ள பிரதமர் அந்தோனி அல்பானீஸ், 'நாடாளுமன்றங்கள் சட்டங்களை இயற்றுகின்றன. ஆனால் மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள். இது உங்கள் நேரம், உங்கள் வாய்ப்பு, சரித்திரம் படைப்பதில் ஒரு பகுதியாக இருப்பதற்கான வாய்ப்பு. இப்போது, ஆஸ்திரேலிய மக்களுக்கு நல்லிணக்கத்திற்கு 'ஆம்' என்றும், 'முதல் பூர்வீக மக்களுக்கான' அங்கீகாரத்திற்கு 'ஆம்' என்றும் சொல்ல வாய்ப்பு கிடைக்கும்' என்றார்.

ஆஸ்திரேலிய பழங்குடியினரில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். பல வருடங்களுக்கு முன் ஆங்கிலேயர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்ததும், லத்தீன் சட்டப்பூர்வ வார்த்தையான டெர்ரா நுல்லியஸ் (நிலம் யாருக்கும் சொந்தமில்லை) என்று ஒரு கொள்கையை பயன்படுத்தி பூர்வீக ஆஸ்திரேலியர்களின் நிலத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

### நாடாளுமன்றத்திற்கான குரல்

ஆஸ்திரேலியாவில் உள்ள பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவில் வசிக்கும் மக்கள் நாடாளுமன்றத்திற்கு ஆலோசனை வழங்கக்கூடிய நாடாளுமன்றத்திற்கான குரல் என்ற ஒரு ஆலோசனை குழுவை அமைப்பதற்காக



அரசமைப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவதை ஆஸ்திரேலியர்கள் ஆதரிக்கிறார்களா, இல்லையா என இந்த வாக்கெடுப்பின் மூலம் மக்களிடம் கேட்டறியப்படும்.

நாடாளுமன்றத்திற்கான குரல் என்ற ஒரு ஆலோசனை குழுவை அமைப்பதற்காக அரசமைப்பு சட்டத்தில் மாற்றம் கொண்டு வரும் இத்தகைய மாற்றம், பழங்குடி மக்களுக்கு அங்கீகாரத்தைக் கொடுக்கும். 1960கள் வரை தேசிய மக்கள் எண்ணிக்கைக் கணக்கெடுப்பில் ஒரு தனித்துவமான குழுவாகக்கூட ஆஸி. பழங்குடி மக்கள் கருதப்படவில்லை. முதல்முறையாக கொள்கை வகுப்பதில் தற்போது அவர்களும் கணக்கெடுக்கப்படப்போகிறார்கள்.

இந்த சட்டத்தை நாடாளுமன்றத்தின் மேலவையான செனட்டில் 52 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 19 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்து நிறைவேற்றினர். இதேநேரம் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தின் கீழ்சபை கடந்த மே மாதம் இந்த வரைவு சட்டத்தை நிறைவேற்றியது.



### சரித்திரம் படைக்க முடியும்

நாம் ஒன்று சேர்ந்து, பழங்குடியின மக்களை நமது அரசமைப்பில் அங்கீகரிப்பதன் மூலம் சரித்திரம் படைக்க முடியும் என்று பிரதமர் அந்தோனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார். அவரது மத்திய இடதுசாரி ஆட்சி, குறைந்த அளவிலான கல்வி, மோசமான சுகாதாரம் மற்றும் அதிக சிறைத்தண்டனை விகிதங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படும் பழங்குடி சமூகத்தை மேம்படுத்த விரும்புவதாகக் கூறுகிறது.

ஆஸ்திரேலியர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்குக் குரல் கொடுப்பதற்கு ஒருபடி நெருங்கி வந்துள்ளோம் என்று பூர்வீக ஆஸ்திரேலிய அமைச்சர் லிண்டா பர்னி கூறியுள்ளார்.

அரசமைப்பில் எந்த மாற்றத்திற்கும் இரட்டைப் பெரும்பான்மை தேவை. அதாவது, தேசிய அளவில் 50%க்கும் அதிகமான ஆம் வாக்குகள் இருக்கவேண்டும் மற்றும் குறைந்தது ஆறு மாநிலங்களில் நான்கு மாநிலங்கள்




அதற்கு ஆதரவு தெரிவிக்கவேண்டும்.

எதிர்க்கட்சியான பழமைவாதக் கூட்டணியானது அதன் வாக்கெடுப்பு நிலைப்பாட்டில் பிளவுபட்டுள்ளது. ஆனால் லிபரல் கட்சியின் தலைவர் பீட்டர் டட்டன் ஆம் என்ற வாக்கு அதிகாரப்பூர்வமாக நாட்டை இன ரீதியாகப் பிரிக்கும் என்று புகார் செய்துள்ளார்.

### 60,000 ஆண்டுகளாக வாழும் பழங்குடியினர்

இந்த பொது வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டால், குறைந்தபட்சம் 60,000 ஆண்டுகளாக இக்கண்டத்தில் வாழ்ந்து வரும் ஆஸ்திரேலிய பழங்குடியினத்தவர்கள், முதல் முறையாக அரசுமைப்பினால் அங்கீகரிக்கப்படுவார்கள்.

இதனால் இந்த வாக்கெடுப்பு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவாக பார்க்கப்படுகிறது. இதன் மூலம், அரசமைப்பு சட்டம் வழங்கும் உரிமையின் காரணமாக, இவர்களை பாதிக்கும் சட்டங்கள் குறித்து இவர்களைக் கலந்தாலோசித்தாகவேண்டும் என்ற உரிமை இவர்களுக்குக் கிடைக்கும்.

இருப்பினும் கணிப்புகளின்படி, பெரும்பாலானோரின் ஆதரவு இருந்தாலும், இது குறித்த சர்ச்சைகள் விவாதங்கள் கடுமையாவதை தொடர்ந்து, தற்போது ஆதரவு குறைய தொடங்குவதாகத் தெரிகிறது.

பழங்குடிப் பெண்ணும், ஆளும் தொழிற்கட்சி செனட்டருமான 'மலர்ண்ட்ரி மெக்கார்த்தி அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசும்போது, அரசமைப்பில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்கிற எளிமையான வேண்டுகோள் இது. பெரும்பாலான மக்கள் இது நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் எனக் கூறினார்.

ஆயினும் பழங்குடியின ஆஸ்திரேலியர்களிடையேகூட, முன்மொழியப்பட்ட இந்த மாற்றம் பெருமளவில் பிரபலமாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது பழங்குடியினரின் குரல் மீதான முக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க வாக்கெடுப்பு அக்டோபர் 14 அன்று நடைபெற்ற பின்னரே புதிய மாற்றத்திற்கான வழிமுறை திறக்கபபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்து....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லை நாடுகளின் சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 23 உறுப்பு நாடுகள் மற்றும் 11 உரையாடல் கூட்டாளர்கள் என்ற அளவில் விரிவடைந்துள்ளது. 23ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் 2023 முதல் 2025 வரையான காலப்பகுதிக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கும்.

வர்த்தகம் மற்றும் முதலீடு, கடல்சார் காவல் மற்றும் பாதுகாப்பு, மீன்பிடி முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் பசுமைப் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில், சங்கத்தால் அடையாளம் காணப்பட்ட ஆறு முன்னுரிமைப் பகுதிகளில் ஒத்துழைப்பதற்கானவழிகள்குறித்து அமைச்சர்கள்ஆலோசிக்கவுள்ளனர்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின்சங்கத்தின்பொதுச்செயலாளர் கலாநிதி சல்மான் அல் ஃபரிசி மற்றும் மொரிஷியஸில் உள்ள இந்து சமுத்திர எல்லை சங்க செயலகத்தின் பணிப்பாளர்களும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

எமது நாட்டுக்கு விஜயம் செய்யும் அமைச்சர்கள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ளதுடன், இலங்கையில் தங்கியிருக்கும்போது,இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் ஏனைய அமைச்சர்களுடனும் இருதரப்பு கலந்துரையாடல்களிலும்ஈடுபடுவர்.

## துரத்தப்பட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மயிலத்தமடுவிலிருந்துவிரட்டப்பட்டதமிழ்ப்பண்ணையாளர்களுக்கு நீதி கோரியும், ஜனாதிபதி ரணிலுடைய பயணத்தின்போது மட்டக்களப்பினுடைய பண்ணையாளர்களதும் எமதும் எதிர்ப்பைக் காட்டும் முகமாகவும் நாங்கள் இங்கே கூடி இருக்கின்றோம்.

மக்களுடைய ஜனநாயகக் குரல்வளையை அடக்குவதற்காக பொலிஸார் இங்கு குவிக்கப் பட்டிருக்கின்றார்கள். இராணுவத் தினர் பேருந்து பேருந்தாககொண்டுவந்துஇறக்கப்பட்டிருக்கின்றார்கள்.

வன்முறை ஏற்படக்கூடிய ஒரு பதற்றமான சூழல்தான் உருவாக்கப்பட்டது. ஆனால் மக்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றார்கள்.

அவர்கள் போராடுவது அவர்க ளுடைய ஜனநாயக உரிமைக்காக. நாங்கள் போராடுவது அந்த மக்க ளுடைய ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவதற்காக. எத்தகைய அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டாலும் எங்களுடைய போராட்டம் தொடரும்.

நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்ற விடயம்மயிலத்தமடுபால்பண்ணையாளர்களுடைய வாழ்வாதாரம், பூர்வீக காணிகள் மீளவும் அவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அதுமட்டுமன்றி இந்த விடயம் சம்பந்தமான ஒரு சர்வதேச விசாரணையும் அவசியமாகும். அப்போது இந்தப் பூர்வீக நிலங்கள் யாருடையவை என்பதும் வெளிப்படும் - என்றார்.

## அனைவருடனும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

பண்ணை யாளர்கள் சார்பில், பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீ.தியாகராசா செயலாளர் பா.பரசுராமன் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசியர் த.ஜெயசிங்கம் ஆகியோர் அடங்கிய குழுவினர் பங்கேற்றிருந்தனர்.

மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் சம்பந்தமான மனுஒன்றும்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவிடத்தில் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து, பேராசிரியர். த.ஜெயசிங்கம், பண்ணையாளர்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் சம்பந்தமாக எடுத்துரைத்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பிலும் அதீத கவனம் எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், மயிலத்தமடு பண்யைளார்கள் சம்பந்தமான பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை எட்டும்பொருட்டு, கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், மகாவலி அதிகாரசபை, வனப் பாதுகாப்பு திணைக்களம்மற்றும்பண்ணையாளர்கள்உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரையும் ஒரேமேசையில் அழைத்து கலந்துரையாடி நிரந்தரமான தீர்வினை வழங்குவதற்குநடவடிக்கைகளைவிரைவில்எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் என்று தமிழ் உணர்வாளர்கள் குழுவின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் தெரிவித்தார்.



## கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தை நடைமுறைப்படுத்த வுள்ளதாகவும்கூடத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்று கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇதனைத்தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

அவர்அங்குஉரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு ஒரு அதிர்ஷ்டமான மாவட்டம். சுமார் 150 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட இரண்டு பாடசாலைகள் இங்குள்ளன. நான் நேற்றுபுனிதமைக்கல்கல்லூரியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டேன். இன்று செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்துள்ளேன்.

மறைந்த அமைச்சர் கே.டபிள்யூ. தேவநாயகன் இந்தப்பாடசாலையில் கற்றவர். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அமைச்சரவையில் நான் அவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன். இப்பாடசாலையில் செங்கலடி, கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகள் உயர்தரக் கல்வியைப் பெற முடிந்தது.

ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது அதனைப் புரிந்து கொள்ள முடியும். மேலும், சில மாணவர்கள் கணக்கியல் உள்ளிட்ட ஏனைய பாடநெறிகளைப் படிக்கின்றனர்.

இந்த மாணவர்கள் தொழில்நுட்பத் துறையில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்தப் பாடசாலையில்சிறந்ததொழில்நுட்ப ஆய்வகம் இல்லை. எனவே, இப்பாடசாலைக்கு உயர்மட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். இந்தப் பாடசாலையை முன்னேற்றவேண்டும். இங்கு மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி நடனத்திலும் சிறந்து விளங்குகின்றனர்.

செங்கலடி பிரதேசம் அபிவிருத்தியடைந்துள்ளது. இப்பகுதிகள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவான அமைச்சர்களான .தேவநாயகன் மற்றும் ராஜதுரை ஆகியோரின் விருப்பமும் அதுவே. அந்த ஆசையை நிறைவேற்றுவோம்

மட்டக்களப்பு மாவட் டம் கல்வியினால் அபிவிருத்தியடைந்துள்ளது. ஆனால் பொருளாதாரம் இன்னும் வலுவாக இல்லை. அடுத்த 10 வருட திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை பொருளாதார ரீதியாக பலப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

மகாவலி திட்டத்தின் ஊடாக இந்தப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன திட்டமிட்டிருந்தார். ஆனால் போர் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை. தற்போது திருகோணமலை மாவட்டத்தை இந்தியாவுடன் இணைந்து பெரும் நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பியகமவில் 400 ஏக்கர் முதலீட்டு வலயம் உள்ளது. ஆனால் திருகோணமலை 1000 ஏக்கர் முதலீட்டு வலயத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகம் முறையாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும். அதற்கான திட்டத்தைசுபானாஜூரான்சிங்கப்பூர் நிறுவனம்தயாரித்துள்ளது. அதனை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம்.

அப்போது திருகோணமலை பெரும் நகரமாக உருவாகும். மேலும் இது பொருளாதார ரீதியாக வலுவான மையமாக மாறும். மறுபுறம், விவசாயத்தையும் மேம்படுத்தவேண்டும்.

மகாவலி திட்டத்தில் விடுபட்ட மகாவலிஏமற்றும்பிவலயங்களை அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தை முன்னேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதியில்நவீனவிவசாயத்துறையை உருவாக்க உத்தேசித்துள்ளோம். இந்த மாகாணம் தற்போது அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளது.

புதியபயிர்களைஅறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடை வளர்ப்பிக்காகபுதியகால்நடைகளை வழங்குவதன் மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு இலங்கையில் உள்ள அம்பேவெல போன்றஉள்நாட்டுநிறுவனங்களின் ஆதரவையும் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதரவையும் பெற எதிர்பார்க்கிறோம்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக நிலாவெளி முதல் பானம வரையிலான சுற்றுலா வலயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. காடு மற்றும் ஏரி பகுதிகள் சுற்றுலாத்துறைக்காக மேம்படுத்தப்படுத்த எதிர்பார்க் கப்படுகிறது.

எதிர்வரும் 10 வருடங்களில் திருகோணமலை நகரின் அபிவிருத்தி, மகாவலி ஏ மற்றும் பி பிரிவுகளின் அபிவிருத்தி மற்றும் விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பணிகள் என்பவற்றின் மூலம் இந்தப் பகுதி அபிவிருத்தி செய்யப்படும். இதன் மூலம் இந்த மாகாணங்களில் புதிய பொருளாதாரம்உருவாக்கப்படுகிறது. தற்போதைய பிரச்சினையான பால் பண்ணையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் - என்றார்.







காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்ஷக்கள் பயணித்த இனவாத வழியில் ரணில்

## வினோநோகராதலிங்கம் சாட்டை

சிறுபான்மையின மக்களின் வாக்குகள் இனித் தேவையில்லை என்பதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

சிங்கள மக்களின் வாக்குகளை கவர்வதற்காக ராஜபக்ஷர்கள் பயணித்த இனவாத வழியில் ஜனாதிபதி பயணிக்கத் தொடங்கியுள்ளார் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மூளைசாலிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

22மில்லியன் சனத்தொகை கொண்ட நாட்டில் ஓர் அரசாங்கம் சீரான அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாதுஎன்றால் அது மிகவும் பரிதாபத்துக்கு, அவ்வாறான நாட்டை கேவலத்துக்குரிய நாடாகவே நாம் பார்க்க வேண்டியுள்ளது.

அருகிலுள்ள தமிழ்நாட்டைப் பாருங்கள் சுமார் 76 மில்லியன் மக்கள் வாழ்கின்ற தமிழ்நாட்டில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தலைமையில் ஒரு நல்லாட்சி நடந்து கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் ஒரு நல்லாட்சியை வழங்க முடியும் என்றால் ஏன் இலங்கையில் அது முடியாது?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஜேர்மன் நாட்டு ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் வழங்கியிருந்தார். அந்த நேர்காணலில் அவரின் தொனி எமக்கு பல விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளது. கடந்த காலத்தில் குண்டு வெடிப்புக்கள் மூலம் ஆட்சியை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் கைப்பற்றினர் எனச் சொல்லப்படுகின்றது.

இவ்வளவு காலமும் ரணில் விக்கிரமசிங்கவை சிறுபான்மையின மக்கள் ஒரு வேறுபட்ட கண்ணோட்டத்துடன் பார்த்த நிலைமை இருந்தது.

ஆனால் ஜேர்மன் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் ஒட்டு மொத்த சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக, ஆட்சியை பிடிப்பதற்காக பொதுஜன பெரமுனவினர் எப்படி முயன்றார்களோ அதேபோன்று சிறுபான்மையினத்தை விடுத்து, சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தேவையில்லை ,அவர்கள் தேவையில்லை என்ற நோக்கத்தில் தான் கருத்துக்களை ஆவேசமாக முன்வைத்துள்ளார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நேர்காணலை சிங்கள ஊடகங்கள் வரவேற்றுள்ளன, சிங்கள மக்கள் ஆதரிக்கின்றார்கள். வரவேற்கின்றார்கள்.

கடந்த காலங்களில் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் ஜனாதிபாதியாக தற்போதிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தேவைப்பட்டது.

ஆனால் தற்போது தேர்தல் நெருங்கிவரும் நிலையில் அவருக்கு தேர்தல் வெற்றியே ஒரே குறிக்கோளாகவுள்ள நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ போன்று சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர அவர் வழங்கியுள்ள இந்த நேர்காணல் மூலம் சிறுபான்மையின மக்களின் வாக்குகள் தனக்குத் தேவையில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றை கடுமையாக விமர்சித்துள்ளார்.

ராஜபக்ஷர்களும் கடந்த காலங்களில் இவ்வாறான வழியில் தான் ஆட்சிக்கு வந்தார்கள். இறுதியில் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு சிங்கள மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் தேட அவர் முயற்சிக்கின்றார்.

இலங்கையின் குரங்குகளை சீனா மட்டுமின்றி வேறு நாடுகளும் கோருவதாக விவசாய அமைச்சர் கூறியிருந்தார். ஆகையால் முதலில் இங்குள்ள மனிதக் குரங்குகளை, அரசியல் குரங்குகளை ஏற்றுமதி செய்ய வேண்டும் வெளிநாடுகளுக்கு அப்புறப்படுத்த வேண்டும் அப்படி செய்தால்தான் இந்த நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றைக் காணமுடியும்.

- என்றார். (05)





## மன்னாரில் கடற்றொழிலாளர்களின் வலையில் சிக்கிய அபூர்வ பாம்புமீன்

மன்னார் கடற்றொழிலாளர் ஒருவரின் வலையில் மிகவும் அபூர்வமும் ஆபத்து நிறைந்த விலாங்கு மீன் என அழைக்கப்படும் பாம்பு மீன் ஒன்று சிக்கியுள்ளது.

சனிக்கிழமை கடற்றொழிலில் ஈடுபட்ட நிலையிலேயே குறித்த கடற்றொழிலாளரின் மீன் பிடி வலையில் குறித்த மீன் சிக்கியுள்ளது.

பாம்பின் தோற்றம் கொண்ட குறித்த மீன் 10 அடிக்கும் அதிகமான நீளத்தை கொண்டு காணப்படுகின்றது.

பெரும்பாலும் இவ்வகை மீன்கள் கடற்றொழிலாளர்களின் வலைகளில் சிக்குவது குறைவாக காணப்படுகின்றது.

அவ்வாறு சிக்குகின்ற மீன்களும் அளவில் சிறிதாகவே காணப்படும்.

ஆனாலும் சனிக்கிழமை பிடிபட்டுள்ள குறித்த மீன் 10 அடிக்கும் அதிகமான நீளத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இந்த வகை மீன்கள் இடுப்பு பிடிப்பு, உட்பட பல்வேறு நோய்களுக்கான மருந்தாக அமைவதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (05)

# இணையம் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பாதிப்புக்கள் குறித்தே அதிக முறைப்பாடுகள்

## டிரான் அலஸ் சுட்டிக்காட்டு

2016ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட செயற்பாடுகளின் பிரதிபலனாகவே இந்த சட்டங்களைக் கொண்டு வரவேண்டியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இணையம் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட்ட தரப்பினருக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன என்றும் அதனை உத்தேச சட்டமூலத்தின் ஊடாக குறைக்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் இதன்போது சிவில் அமைப்புகளின் தலைவர்கள், ஊடக அமைப்புகள், ஊடகவியலாளர்கள், சமூக ஊடக செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



மேலும் இலங்கை பத்திரிகை சங்கம், ஊடக சுதந்திர இயக்கம் மற்றும் சமூக ஊடக ஒன்றியங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக கலந்துரையாடல் அவசியம் என இந்தக் கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டப்பட்டதுடன் உத்தேச சுதந்திரம், கருத்து சுதந்திரம் முடக்கப்படுவதாகவும் இதன் போது இவர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்ட செயற்பாடுகளின் பிரதிபலனாகவே இந்தச் சட்டங்களைக் கொண்டு வரவேண்டியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இணையம் மூலம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட்ட தரப்பினருக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன என்றும் அதனை உத்தேச சட்டமூலத்தின் ஊடாகக் குறைக்க முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் தொடர்பில் ஆசிய இணையம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், தூதரக அதிகாரிகள், ஊடக நிறுவனங்களுடன் தொடர்ந்தும் கலந்துரையாடவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# தேடப்பட்ட முன்னாள் கொமான்டோ துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

தலங்கமவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஹங்வெல்லவில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் இராணுவத்தின் முன்னாள் கொமாண்டார் தர அதிகாரியென விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி தலங்கம பகுதியில் உள்ள ரொபர்ட் குணவர்தன மாவத்தையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதில் 44 வயதுடைய நபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை விசேட அதிரடிப் படையினர் எடுத்த போது , சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இதன்போது, விசேட அதிரடிப்படையினரும் குறித்த சந்தேகநபர் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதில் உயிரிந்துள்ளார். (05)

# இரகசிய தகவலின் அடிப்படையில் திருமலையில் ஒருவர் கைதானார்

திருகோணமலை - புல்மோட்டை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோத வெடிபொருள்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புல்மோட்டை பொலிஸ் அதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சந்தேகநபரிடமிருந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படும் 09 டெடனேட்டர் மற்றும் 09 சேவா நூல் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் புல்மோட்டை-ஜின்னாபுரம் பகுதியைச் சேர்ந்த கே.எம்.சாதிக் (28 வயது) என தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக புல்மோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# மார்பகப் புற்றுநோயால் வருடாந்தம் 700 தொடக்கம் 800 பெண்கள் இறப்பு

*நாட்டில் மார்பகப் புற்றுநோயால் வருடாந்தம் 700 தொடக்கம் 800 பேர் உயிரிழக்கின்றார்கள்.*

*இதனை, தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் ஆலோசகர் சமூக மருத்துவர் சுராஜ் பெரேரா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.*



*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*2020 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 5,189 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். சுமார் ஒரு நாளைக்கு 14 நோயாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள்.*

*புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால் ஆரம்ப காலத்திலேயே நோயைக்குணப்படுத்தி விடலாம் என சமூக மருத்துவர் சுராஜ் வலியுறுத்தியுள்ளார்.*

*நோய்வாய்ப்பட்ட சுமார் 10,000 பெண்களுக்கு முழுமையாக சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.*

*20 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதாந்தம் மார்பகப் புற்றுநோய் பரிசோதனை செய்வது அவசியம் எனத் தெரிவித்துள்ளார். (05)*

# வெளிநாட்டு சிகரெட் வகைகளுடன் யாழ்., பனிப்புலத்தில் ஒருவர் கைது

வெளிநாட்டு சிகரெட்டுக்களை வைத்திருந்த 33 வயதுடைய ஆணொருவர், இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பனிப்புலம் அம்மன் கோவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து 28 சிகரெட் பெட்டிகள் மீட்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் இந்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.



கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

JRIDE
BEYOND THE ROAD

# ஜே ரைட்
## ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA




ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!




இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



+94 21 222 8358

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# நீதிபதி விடயத்தைப் பெரிதாக்க வேண்டிய தேவை கிடையாதாம்

## விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கூறுகிறார்



நீதிபதி விடயத்தை பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை நிறுத்திக்கொள்ளலாம் என்பதே எனது கருத்து என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சித்தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது முல்லைத்தீவு நீதிபதி அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியதான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்ற நிலையில் போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

நீதிபதி விடயத்தை பெரிதாக்க வேண்டிய தேவை இல்லை நிறுத்திக் கொள்ளலாம் என்பதே எனது கருத்து.

ஏனெனில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றமை இன்று நேற்று இடம்பெறும் விடயம் அல்ல என்பது சட்டத்துறை சார்ந்தவர்களுக்குத் தெரியும்.

2004 ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் நாடாளுமன்றம் சென்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றும் நாடாளுமன்றத்தில் உள்ளார்கள் . அவர்கள் தாங்களாகவேகள்ளவாக்குபோட்டோம் என கூறியவர்கள் இன்றும் நாடாளுமன்றத்தில் உள்ள நிலையில் இலங்கை சட்டம் அவர்களை ஒன்றும் செய்யவில்லை.

ஆகவே இலங்கையில் நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் ஆட்சி அதிகாரம் உள்ளவர்களைப் பாதுகாக்கின்ற நிலையில் மக்களை கட்டுப்படுத்து-வதற்கு புதுச்சட்டங்கள் தேவையில்லை.

இலங்கையின் தற்போதைய நிலையில் தேவையற்ற சட்டங்களான பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டம் என்பன தற்போதைய சூழ்நிலையில் தேவையற்ற ஒரு விடயம். நாட்டில் தற்போது பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் ஊடக நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் என்பன சட்டங்கள் ஆக்கும் செயற்பாடுகள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன.

இந்த சட்டமூலங்கள் தற்போது நாடு இருக்கும் நிலையில் தேவையற்ற ஒன்று. நாட்டுக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படுமானால் 24 மணித்தியாலத்திற்குள் நாடாளுமன்றத்தைக் கூட்டி சட்டம் இயற்ற இலங்கை நாடாளுமன்றத்தால் முடியும். உதாரணமாக கூற வேண்டுமானால் வேறு யாரையும் அல்ல ஆனந்தசங்கரி துரோகியென சுட்டுக் கொல்வதற்கும் இலங்கையில் சட்டம் இயற்ற முடியும். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# யாழ். காங்கேசன்துறையில் ஞான வைரவர் ஆலயம் முன் புத்தர் சிலையும் அரச மரமும்





யாழ். தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காங்கேசன்துறை - மாங்கொல்லை பகுதியில் அனுமதியின்றி மரம் வெட்டுதல் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

குறித்த பகுதியானது கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்தது.

இந்நிலையில் அந்த பகுதியில் குடியிருந்த மக்கள் தமது பகுதியில் குடியேற முடியாத சூழ்நிலையில் புலம்பெயர்ந்து வெளி நாடுகளுக்கும் வேறு பகுதிகளுக்கும் சென்றுள்ளனர்.

தற்பொழுது அந்த பகுதியானது இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட நிலையில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த பகுதியில் உள்ள வீடுகள் அனைத்தும் முழுமையாகவும் சேதமடைந்தும் காணப்படுகின்றன. அங்கு ஒருசில வீடுகளின் சுவர்கள் நல்ல நிலையும் இருந்தாலும் கூரைகள் இல்லாமலும் ஜன்னல்கள் இல்லாமலும் காணப்படுகின்றன.

சில வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தரை மட்டமாக்கப்பட்ட வீடுகள் திட்டமிட்டு இடிக்கப்பட்டனவா எனத் தெரியவில்லை. அத்துடன் அப் பகுதியில் உள்ள ஞான வைரவர் ஆலயத்திற்கு முன்பாக ஓர் அரச மரம் உள்ளதுடன் அந்த அரச மரத்தின் கீழ், ஆலயத்தை பார்க்கின்ற வகையில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்து புலம்பெயர்ந்து சுவிஸில் வசிக்கும் குடும்பம் ஒன்று, தமது காணிகள் விடுவித்ததையடுத்து அதனை பார்வையிடுவதற்கு தமது சொந்த இடமான மாங்கொல்லை பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், 'நாங்கள் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக கடந்த 40 ஆண்டுக்கு முன்னர் புலம்பெயர்ந்து சுவிஸிற்கு சென்றுவிட்டு, எமது காணிகளைப் பார்ப்பதற்காக வந்துள்ளோம்.

இந்த ஞானவைரவர் ஆலயம் எங்களது குல தெய்வம். இந்த ஆலயத்திற்கு சற்று தள்ளி முன் பக்கமாக ஓர் ஆலமரம் மாத்திரமே நின்றது. ஆனால் தற்போது ஆலயத்தின் முன் பக்கமாக அரச மரம் உள்ளதுடன், அதன் கீழ் புத்தர் சிலையும் உள்ளது. இது நாங்கள் புலம்பெயர்ந்து சென்ற பின்னர் நாட்டப்பட்ட மரமாகத்தான் இருக்க முடியும்' எனத் தெரிவித்தனர்.

அந்த பகுதியில் இருந்த இராணுவத்தினர் தமக்கு வழிபட வேண்டிய தேவை இருந்தால் புத்தர் சிலையை வேறு ஓர் இடத்தில் வைத்து வழிபட்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் குறித்த ஆலயத்திற்கு முன்பாக அரச மரத்தை வைத்து வளர்த்து, அதன் கீழ் புத்தர் சிலையை வைத்துள்ளமை மக்கள் மத்தியில் மீண்டும் ஓர் அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது. (05)

# மட்டக்களப்பில் தேவாலயத்தின் மண்டபத்தை உடைத்து பெறுமதியான பொருள்கள் திருட்டு





மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மண்டபத்தை உடைத்து அங்கிருந்த இரண்டு பெறுமதியான உலோக குத்துவிளக்குகள் திருடப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட திருடன் தப்பிச் சென்றுள்ள போதிலும் குத்து விளக்குகளை காத்தான்குடி பொலிஸார் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை மீட்டுள்ள்ளனர் என காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ எம் எஸ் ஏ ரஹீம் தெரிவித்தார்.

ஆரைம்பதி பிரதான வீதியில் உள்ள தூய குழந்தை திரேசா ஆலயத்தின் மண்டபத்தை கடந்த 3 ஆம் திகதி உடைத்து அங்கிருந்த இரண்டு பெறுமதியான குத்து விளக்குகளை திருடி சென்ற நபர் தப்பியோயுள்ள நிலையில் குறித்த குத்துவிளக்குகளை ஆரையம்பதி கர்பலா பிரதேசத்தில் உள்ள பற்றைக் காட்டுக்குள் இருந்து பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

சுமார் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த குத்து விளக்குகளை திருடிய நபர் தப்பியோடிள்ள நிலையில் பொலிசார் அவரை தேடி வருகின்றனர். மண்டபத்தின் முன் கதவை உடைத்தே திருடன் குறித்த குத்து விளக்குகளை திருடிச் சென்றுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தொடருந்துப் பயணச்சீட்டு பரிசோதகரை தாக்கிய நபரை சூழ்ந்து தாக்கிய பயணிகள்

## கம்பஹாவில் சம்பவம்

கம்பஹா ரயில் நிலையத்தில் பயணச்சீட்டு பரிசோதிக்கும் உத்தியோகத்தரை தாக்கியதாக கூறப்படும் நபர் ஒருவரை, பெண்கள் உள்ளிட்ட பயணிகள் தாக்கியதில் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என கம்பஹா தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் பயணச்சீட்டு பரிசோதிக்கும் அதிகாரியும் காயமடைந்து கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ரயில் பயணச்சீட்டு பரிசோதிக்கும் உத்தியோகத்தர் தாக்கப்படுவதை கண்டு ரயிலுக்காக காத்திருந்த பெண்கள் மற்றும் பயணிகள் மறியல் போராட்டத்தை ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டாம் என கூறி இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# பெண் பொலிஸ் கண்காணிப்பாளரின் தங்கச் சங்கிலி தொடருந்தில் அபகரிப்பு

கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயிலில் பயணித்த பெண் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கழுத்தில் காணப்பட்ட தங்க மாலையை ரண்மலைகொடுவ ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து ஒருவர் பறித்துச் சென்றுள்ளார் என கோட்டை பொலி-ஸார் தெரிவித்துள்ளனர்.

பதக்கத்துடன் கூடிய தங்க மாலையின் பெறுமதி 2,22,500 ரூபா என பொலிஸ் பரிசோதகர் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த பொலிஸ் பரிசோதகர் கண்டி கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றுபவராவார். (05)

# பதுளு ஓயாவில் தடம்புரண்ட கார்: வெள்ளத்தில் நீந்தித் தப்பிய சாரதி





பதுளை பண்டாரவளை - பிரதான வீதியில் உடுவர 5 நில்போவில பிரதேசத்தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி பதுளு ஓயாவில் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

எல்லயிலிருந்து பசறை நோக்கிச் சென்ற கார் ஒன்றே வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் வீழ்ந்து பதுளு ஓயாவில் கவிழ்ந்தது.

அதிகாலை 1.00 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், வாகனம் நீரில் மிதந்து கொண்டிருந்த போது, உரிமையாளர் காரில் இருந்து இறங்கிய பதுளு ஓயா வெள்ளத்தில் நீந்தி உயிர் தப்பியுள்ளார். (05)

# எனது புகைப்படங்களை காட்சிப்படுத்த வேண்டாம்

## ஜனாதிபதி அதிரடி உத்தரவு



தனது புகைப் படங்கள் அல்லது உருவப்படங்கள் மற்றும் சுவரொட்டிகளையோ காட்சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் சுவரொட்டிகளில் தமது புகைப்படத்தை இடுவதை அரசியல் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கூட்டாகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# யாழில் வாளுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணத்தில் வாள் ஒன்றுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் , காரைநகர் ஊரி பகுதியை சேரந்த இளைஞன் வாள் ஒன்றை வைத்திருப்பதாக ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பொலிஸார் இளைஞனின் வீட்டை முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

அதன்போது வீட்டில் இருந்து வாள் மீட்கப்பட்டதை அடுத்து, வீட்டில் இருந்த 28 வயதான இளைஞனைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட இளைஞனை பொலிஸா-ர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் பாரம்பரிய கிளித்தட்டுப் போட்டியில் இந்துபுரம் 'பி' அணி வெற்றி வாகை சூடியது


















(ச.தவசீலன்)

வணங்காமண் மறுவாழ்வு கழகத்தால் நடத்தப்பட்ட வணங்காமண் வெற்றிகிண்ண கிளித்தட்டுசுற்றுப்போட்டியின்இறுதிபோட்டியில் இந்துபுரம் 'பி' அணி வெற்றி வாகை சூடி ஒரு லட்சம் ரூபாய் பணப் பரிசையும் வென்றது. இறுதிப் போட்டிவணங்கா மண் நிறுவுனரும், தலைவருமான தர்மலிங்கம் ஜீவரத்தினம் (ஜீவா) தலைமையில் ஒட்டுசுட்டான் மகாவித்தி யாலய மைதானத்தில் இடம்பெற்றது.

அழிவு நிலையில் உள்ள தமிழர்களது பாராம்பரிய விளையாட்டாக கிளித்தட்டு இருப்பதனால் அதனை கிராம மட்டங்களில் இருந்து மீளுருவாக்கும் நோக்கோடு இந்தப் போட்டி முதற்கட்டமாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள அணிகளை உள்வாங்கி நடத்தப்பட்டது.

இறுதிப்போட்டியில்இந்துபுரம்பிஅணியும், வித்யாபுரம்அணியும்பலப்பரீட்சைநடத்தின. அதில் வித்யாபுரம் அணி 5 பழங்களும், இந்துபுரம் பி அணி 10 பழங்களும் பெற்றன.

வெற்றியீட்டியவித்யாபுரம்பிஅணிமுதலாம் பரிசாக ஒரு லட்சம் ரூபா பணம்பரிசையும், வெற்றிக்கிண்ணத்தையும் தட்டி சென்றது. இரண்டாம் இடத்தை பிடித்த வித்யாபுரம் அணிக்கு 50 ஆயிரம் ருபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும், மூன்றாம் இடத்தை பிடித்தஅணிக்கு25ஆயிரம்ரூபாபணப்பரிசும் , வெற்றிக்கிண்ணமும் கிடைத்தன.

இறுதிப்போட்டியில் ஆட்டநாயகனுக்கான வெற்றி கிண்ணமும், தொடர் ஆட்ட நாய கனுக்கான வெற்றிக்கிண்ணமும் கலந்து கொண்ட பிரதம அதிதிகளால் வழங்கி வைக் கப்பட்டிருந்தது.

சிறப்புவிருந்தினராகவடமாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தி யமூர்த்தி கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணத்தை வழங்கி வைத்திருந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2023இல் வெளியிடப்பெற்றது.